# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.06.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *சம்பளச் சபைகள் (திருத்தம்)*

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *17.00***　　**தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் 'முதன்மைச் சட்டவாக்கம்' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தவறுசெய்கின்ற தொழில்தருநர்களின்மீது அதிகரித்த தண்டனையை விதிப்பதுமாகும்.

**வாசகம் 3:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஆறாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்கு வேலையாட்கள் பற்றிய இடாப்பைத் தொழில்தருநர் பேணிக்காப்பதனைத் தேவைப்படுத்துவதுமாகும்.

**வாசகம் 4:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சம்பளங்களின் கொடுப்பனவு தொடர்பில் அதைச் செலுத்தத் தவறுகின்ற தொழில்தருநர்கள்மீது அதிகரித்த தண்டனையை விதிப்பதுமாகும்.

**வாசகம் 5:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, வருமதியாகவுள்ள பணத்தொகைகளை அறவிடுதல் தொடர்பில் முறைப்பாடொன்றை செய்வதற்கான காலப்பகுதியை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 6:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில தவறுகள் தொடர்பில் அதிகரித்த தண்டனையை விதிப்பதுமாகும்.

**வாசகம் 7:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில தவறுகள் தொடர்பில் அதிகரித்த தண்டனையை விதிப்பதுமாகும்.

**வாசகம் 8:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில தவறுகள் தொடர்பில் அதிகரித்த தண்டனையை விதிப்பதுமாகும்.

**வாசகம் 9:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பணம் அறவிடுவதற்காக எக்காலப்பகுதியினுள் துடர்ச்சியொன்று தொடுக்கப்படக்கூடுமோ அக்காலப்பகுதியை நீடிப்பதுமாகும்.

**வாசகம் 10:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில தவறுகள் தொடர்பில் அதிகரித்த தண்டனையை விதிப்பதுமாகும்.

**வாசகம் 11:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவை மாற்றீடு செய்வதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஒப்பந்தத்தை அல்லது வேலை ஒழுங்கேற்பாட்டை ஒழுங்குபடுத்துவதுமாகும்.

## சம்பளச் சபைகள்
## (திருத்தம்)

ச.வ. - ஓ. 55/2009

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, சம்பளச் சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

136 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (136 ஆம் அத்தியாயமான) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம்:-

''(1) இப்பாகத்தின் இப்பிரிவினது எவையேனும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத்தவறுகின்ற தொழில்தருநர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.'';

(2) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில்-

(அ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், ''ஐம்பது நூற்று வீதத்திலானதொரு மிகையிறுப்பு.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐம்பது நூற்று வீதத்திலானதொரு மிகையிறுப்பு;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(உ) அத்தகைய பணத்தொகை இருபத்தி நான்கு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாக விருக்கின்றவிடத்து, பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட ஒவ்வொரு காலப் பகுதிக்கும் அதன்பின்னர் பத்து நூற்று வீதத்திலானதொரு மிகையிறுப்பு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "தொடங்குகின்ற நான்காண்டுகளைக் கொண்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொடங்குகின்ற ஆறாண்டுகளைக் கொண்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.:-

"(1) இருபத்தோராம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எவரேனும் வேலையாளுக்குச் சம்பளத்தைச் செலுத்துவதற்குத் தவறுகின்ற ஒவ்வொரு தொழில்தருநரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பின் போது ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்

ஆளாதலும் வேண்டும்; அத்துடன் மேலதிகமாக, குற்றத் தீர்ப்புக்குப்பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் இப்பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது சம்பளச் சபையொன்றின் ஏதேனும் முடிபுக்கு இணங்க எவரேனும் வேலையாளுக்கு ஏதேனும் கொடுப்பனவைச் செலுத்தத் தவறுகின்ற ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு தொழில்தருநர் தவிர்ந்த ஒவ்வொரு தொழில்தருநரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பின் போது ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் மேலதிகமாக, குற்றத் தீர்ப்புக்குப்பின்னர் அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், உட்பிரிவில், ''நான்காண்டுகளின்போது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆறாண்டுகளின்போது'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், உட்பிரிவில், ''ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், உட்பிரிவில், "இருநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் "மூன்று மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களையும் "பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு, "இருநூறு ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் "மூன்று மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களையும் "பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "நான்காண்டுகளினுள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஆறாண்டுகளினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு, அப்பிரிவின் (எ) என்னும் பந்தியை அடுத்துப்பின்வரும் பந்தியில், "ஓராயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் "ஆறுமாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களையும் "பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"வியாபாரம் அல்லது ஏதேனும் வர்த்தக நோக்கம் என்ற*

59அ. (1) எவரேனுமாள், வியாபார அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக, முதற்குறிப்பிடப்பட்ட ஆளின் தொழிற் செயற்பாடுகளின் முழுமையான பாகமாகவுள்ள வேலையைக் கிரமமான

வகையாகச் செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்கேற் பாட்டின்கீழ் வேலை செய்வதற்கு ஆட்கள் தொழிலுக் கமர்த்தப்படு மிடத்து, ஏற்புடையற் பாலனவான விசேட ஏற்பாடுகள்.

அடிப்படையில் புரிவதற்கு வேலையாளர்களைத் தொழிலுக்கமர்த்தும் வேறெவரேனுமாளுடன், வியாபார அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தத்தை அல்லது வேலை ஒழுங்கேற்பாட்டைச் செய்து கொள்ளுமிடத்தும் அத்துடன் அத்தகைய ஆள் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அல்லது வேலை ஒழுங்கேற்பாட்டைப் பின்பற்றி வேலையாளர்களைத் தொழிலுக்கமர்த்துமிடத்தும், அத்தகைய ஒப்பந்தம் அல்லது வேலை ஒழுங்கேற்பாடு, மறைமுகமான தொழில் உறவுமுறையொன்றாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் அத்தகைய ஒப்பந்தம் அல்லது வேலை ஒழுங்கேற்பாடு உண்மையில் மறைமுகமான தொழில் உறவுமுறையொன்றாகவுள்ளதென முறையான விசாரணைகளின் பின்னர் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய வேலையாளர்கள் தொடர்பில் அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் அத்தகைய வேலையை நிறைவேற்றுதலைத் தவிர்க்கும்படி (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட முதற் குறிப்பிடப்பட்ட ஆளை எழுத்தில் பணித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அவர் தொடர்பில் விடுக்கப்பட்ட பணிப்புரையினால் இன்னலுற்ற ஆளொருவர், அத்தகைய பணிப்புரை விடுக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் இச்சட்டத்தின் 59ஆ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட விசேட தொழில் உறவுகள் நியாயசபைக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். விசேட தொழில் உறவுகள் நியாயசபை, அதன்பின்னர், சம்பந்தப்பட்ட எல்லாத் திறத்தவர்களையும் கட்டளை விட்டழைத்தல் வேண்டுமென்பதுடன், ஆணையாளரின் பணிப்புரையை உறுதிப்படுத்தி அல்லது நிராகரித்து தீர்மானமொன்றைச் செய்தலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ, 59இ மற்றும் 59ஈ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றனவென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 59ஆ, 59இ மற்றும் 59ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"விசேட தொழில் உறவுகள் நியாய சபையைத் தாபித்தல்.

59ஆ. (1) 59அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி இன்னலுற்ற எவரேனுமாளினால் நியாயசபைக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடுகளைத் தீர்மானிப்பதற்காக, (இதனகத்துப்பின்னர் "நியாயசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசேட தொழில் உறவுகள் நியாயசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நியாயசபையானது, அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டிய மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அம்மூன்று உறுப்பினர்களும் தொழிற் சட்டங்கள் என்ற துறையில் பரந்த அறிவும் அனுபவமும் உடைய ஆட்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் ஒருவர் இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதியொருவராக இருத்தலும் வேண்டும். அவரே நியாயசபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

(3) நியாயசபையின் உறுப்பினரொருவர் மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும், அப்பொருள்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப் பட்ட கடிதமொன்றின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகை, அமைச்சரினால் அது ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதலும் வேண்டும்.

(5) எவரேனும் உறுப்பினர், பதவிவிலகுகை, அகற்றுகை அல்லது இறப்புமூலம் அல்லது சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகப் பதவிவகிப்பதற்கு அவர் இயலாதிருக்கின்றமையின் விளைவாகப் பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சர், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமிக்கலாமென்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகிக்கலாம்.

(6) அமைச்சர், குறித்தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக நியாயசபையின் எவரேனும் உறுப்பினரை அகற்றலாம்.

(7) ஆணையாளரினால் நியமிக்கப்படும் நியாயசபைச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும்; அவர் நியாயசபையின் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், நியாயசபையின் பணிகள் தொடர்பாக நியாயசபையினாலும் ஆணையாளரினாலும் அவருக்குக் குறித்தளிக்கப் பட்ட அத்தகைய வேறேதேனும் வேலையைக் கவனித்தலும் வேண்டும்.

(8) நியாயசபையின் பணிகளை வசதிப்படுத்து வதற்கு அவசியமானவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஆணையாளர் நியமிக்கலாம்.

(9) நியாயசபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

நியாய சபையின் தத்துவங்களும் பணிகளும்.

59இ. (1) நியாயசபையானது, இயற்கை நீதி நெறிகளுக்கிணங்க 59அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடுகளைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும். முடிபொன்றைச் செய்வதன்மேல், தவிசாளர், அம்முடிபை ஆணையாளருக்கும் திறத்தவர்களுக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர், நியாயசபையின் முடிபைப் பெற்றுக்கொண்டதன்மேல், அதனை வர்த்தமானியில் வெளியிடச் செய்தல் வேண்டும்.

(3) முடிபானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து திறத்தவர்களிடையே பயனுறுதல் வேண்டும்.

வழக்குத் தொடுப்பதற்கு ஆணையாளருக்குள்ள தத்துவம்.

59ஈ. பிரிவு 59அ என்பதன்கீழ் ஆணையாளரின் ஏதேனும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது 59இ என்னும் பிரிவின்கீழ் நியாயசபையின் முடிபுக்கு முரணான ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் அல்லது ஆளினால் எழுத்தில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய ஆளுக்கெதிராகத் தோதான நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.